021

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

ஆசிரியர் கல்வியில் முதுகலைமாணி நிகழ்ச்சித்திட்டம்

இறுதிப் பரீட்சை – 2008

**ESP 1263** – கலைத்திட்டமும் கற்றல் மதிப்பீடும்

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 25.05.2008 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

மூன்று(03) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.
ஓவ்வொரு விடையும் வெவ்வேறு புத்தகத்தில் எழுதப்படல் வேண்டும்.

01. (i) கலைத்திட்டம் பற்றி கேர் (KERR) என்பவரின் வரைவிலக்கணத்தைக் குறிப்பிடுக. (08 புள்ளிகள்)

(ii) அவருடைய கலைத்திட்டம் அபிவிருத்தி மாதிரியின் மீது செல்வாக்கு செலுத்திய சமூகவியல் மற்றும் கலாசாரக் காரணிகளின் முக்கியத்துவம் தொடர்பாகக் கருத்துரைக்க. (10 புள்ளிகள்)

(iii) இலங்கையில் நடைமுறையிலுள்ள ஆரம்ப மட்ட அல்லது கனிஷ்ட இடைநிலை மட்டக் கலைத்திட்டத்தினைத் தெரிவு செய்து பின்வருவன பற்றி ஆராய்க.

(அ) நீங்கள் தெரிவு செய்த கலைத்திட்டத்தினை அபிவிருத்தி செய்கையில் கேரின் மாதிரி (Kerr"s Model) எத்துணையளவிற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது?

(ஆ) கற்றல் - கற்பித்தல் செயன்முறையை அதிகளவு பயனுறுதி வாய்ந்த தொன்றாக்கக் கலைத்திட்டத்தில் மேற் கொள்ளக்கூடிய முன்னேற்ற நடவடிக்கைகள்.

(15 புள்ளிகள்)

02. (i) கலைத்திட்ட ஒழுங்கமைப்பு என்பதனால் நீங்கள் விளங்கிக்கொள்வது என்ன என்பதை விளக்குக. (05 புள்ளிகள்)

(ii) கலைத்திட்டம் ஒன்றினை ஒழுங்கமைக்கும் போது கவனத்திற் கொள்ளப்படவேண்டிய நான்கு(04) கோட்பாடுகளைச் சுட்டிக்காட்டுக. (08 புள்ளிகள்)

(iii) இவற்றுள் இரண்டு கோட்பாடுகளைத் தெரிவுசெய்து கலைத்திட்டத்தினை ஒழுங்கமைக்கையில் இவை ஏன் கருத்திற் கொள்ளப்படல் வேண்டுமென விளக்குக. (08 புள்ளிகள்)

(iv) குறிப்பிட்ட இலக்குக் குழுவினருக்காகக் கலைத்திட்ட மொன்றினை ஒழுங்கமைக்கையில் கலைத்திட்ட அபிவிருத்தியாளர் எதிர் கொள்ளக்கூடிய பிரச்சினைகளை அடையாளம் காண்க. இப்பிரச்சினைகளை வெற்றி கொள்ள கலைத்திட்ட அபிவிருத்தியாளருக்கு நீங்கள் எவ்வாறு ஆலோசனை வழங்குவீர்கள்? (12 புள்ளிகள்)

03. (i) இலங்கையில் தற்போது ஆசிரிய தேசிய கல்வியியல் கல்லூரிகளில் நடைமுறையிலுள்ள முன்சேவை ஆரம்பமட்ட ஆசிரியர் கல்விக் கலைத்திட்டத்தின் பிரதான அம்சங்களைக் குறிப்பிடுக.
(08 புள்ளிகள்)

(ii) குறிக்கப்பட்ட நோக்கங்களை அடைவதில் இக கலைத்திட்டத்தின் பலம், பலவீனங்களைச் சுருக்கமாக விளக்குக. (12 புள்ளிகள்)

(iii) நீங்கள் இனங்கண்ட பலவீனங்களை முறியடிக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை ஆராய்க. (13 புள்ளிகள்)

04. (i) ‘ஆசிரியர் கல்வி” கலைத்திட்டத்தினை மதிப்பீடு செய்ய வேண்டியதன் தேவையை விளக்குக. (06 புள்ளிகள்)

(ii) கலைத்திட்ட மதிப்பீட்டுச் செயன்முறையின் போது பரிசீலிக்கப்படும் அம்சங்களை ஆராய்க. (09 புள்ளிகள்)

(iii) கலைத்திட்ட மதிப்பீட்டின் போது பொதுவாகப் பயன்படுத்தப்படும் கருவிகளையும் நடைமுறைகளையும் விபரிக்க. (09 புள்ளிகள்)

(iv) இக்கருவிகளினதும் நடைமுறைகளினதும் பயனுறுதித் தன்மை பற்றி ஆராய்க. (09 புள்ளிகள்)

05. (i) ஆசிரியர்களையும் ஆசிரிய பயற்றுனர்களையும் மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படும் நான்கு(04) முறைகளைச் சுருக்கமாக விபரிக்க.
(08 புள்ளிகள்)

(ii) மிகவும் பயனுறுதிவாய்ந்ததென நீங்கள் கருதும் மேற்குறித்த முறைகளில் ஒன்றினைத் தெரிவு செய்து, உங்கள் தெரிவினை நியாயப்படுத்துக. (10 புள்ளிகள்)

(iii) மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுவதனால் (i) ஆசிரியர்களுக்கும்
(ii) ஆசிரிய பயிற்றுநர்களுக்கும் கிடைக்கும் நன்மைகளைப் பரிசீலிக்க
(15 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்கு(03) சிறு குறிப்புகள் எழுதுக.

(i) ஆசிரிய பயிற்றுநரின் மேற்பார்வை வகிபங்கு
(ii) மாணவர் சோதனை முடிவுகளைப் பதிவு செய்தலும் பகுப்பாய்வு செய்தலும்.
(iii) கலைத்திட்ட மாற்றத்தினை முகாமை செய்தல்.
(iv) பாடசாலைக் கலைத்திட்டத்தினை அமுல் செய்வதில் பாடசாலை அதிபரின் வகிபங்கு.
(v) கலைத்திட்டக் கொள்கையின் முக்கியத்துவம்.

(11 x 3 = 33 புள்ளிகள்)

(பதிப்புரிமையுடையது)